# குருதிக் கொழுந்து...

(மலையகக் கவிதைகள்)



கவிஞர் பதியத்தளாவ பாறூக்

# குருதிக் கொழுந்து...
## (மலையகக் கவிதைகள்)

கவிஞர் பதியத்தளாவ பாறூக்

வெளியீடு
"கவியகம்.."
104, பிரதான வீதி,
பதியத்தளாவ

எம்மக்கள் இருப்புக்காய் என்று மிங்கு
என்னெழுதுகோல் தாள்மீது தவழ்ந்து ஆளும்!
இம்மண்ணில் இலக்கியம் விதைத்து நிற்கும்
என்னிதயமும் எண்ணியே இணைந்து வாழும்!

# நூலணிகள்

| | |
|---|---|
| பெயர் | குருதிக் கொழுந்து |
| நூலாசியர் | கவிஞர் பதியத்தளாவ பாறூக் |
| உரிமை | ஆசிரியருக்கு |
| பிரசுரம் | 19.04.2015 |
| பேசும் மொழி | இலகு தமிழ் |
| பக்கங்கள் | 28 |
| பிரசவம் | நான்காவது |
| கொழுந்துகள் | 16 |
| அச்சகம் | நூன் அச்சகம் |
| கணனி வடிவம் | அ.க.மு. நிப்றாஸ் |
| பிரதிகள் | 500 |
| விலை | இல்லை |
| அழைப்புகள் | 077 4668012,<br>063 2246009 |

# சமர்ப்பணம்

கண்விரிந்து பார்ப்பதற்குள்
மண்சரிந்து காவுகொண்டு
எண்ணி முடிப்பதற்குள்
ஏற்பட்ட இன்னலில்
சாவுக்குள் சமாதியாகி
சரித்திரமாகிக் கொண்ட
மலையக உறவுகளுக்கும்
பாட்டாளி வர்க்கத்தின்
பங்காளிகளான
தோட்டத்து மக்களுக்கும்
நீட்டுகின்ற இந்நூல்
நினைவின் சமர்ப்பணம்!



# பதிவின் பக்கம்

என்து இலக்கியத்தாய்
ஈன்றெடுத்த
குழந்தைகளில்
குருதிக் கொழுந்து
அடியேனின்
நான்காவது குழந்தையாகும்!

மலையக மாதாவின்
மகனாய் நின்று
பார்த்துக் கொண்டவைகளின்
பக்கங்களே இவைகள்!

இலக்கிய மண்ணில்
எழுந்து நடந்த
என்னெழுதுகோல்
வெறும் கற்பனையை
விவாகரத்துச் செய்து விட்டு
மக்களின் மன வலிகளுக்கு
இதயம் நனைந்து
எடுத்துக் கொண்ட
இணைப்புப் பணியாகும்!

அன்று முதல்
இன்று வரை
பிரசுரங்களின்
பிரசவங்களை
எண்ணத்தில் ஏந்தி
மண்ணுக்குள்
மறைந்தவர்களுக்கும்
மலையக மக்களுக்கும்
இத்தொகுதியை
சமர்ப்பணமாக்கியுள்ளேன்!

என்றும் சத்தியங்கள்
தொலைந்து விடக்கூடாதென்ற
சமகாலத் தரிசனங்கள் எனது
குருதிக் கொழுந்திலும்
குடியேறி இருக்கிறதென்பது
கொள்கைக் குரலாகும்!

பின்புலத்திற்கு பெருமை சேர்த்த
பன்னூலாசிரியர்
எம்.எம்.எம்.மஹ்றூப் கரீம்
அவர்களுக்கும்
பாக்களுக்குப் பட்டறை தந்த
தினகரன்
தினக்குரல்
சுடர் ஒளி
ப்ரிய நிலா
விடிவெள்ளி
மீட்சி (இலன்டன்) (ண)
ஜீவநதி ஆகிய
பத்திரிகை சஞ்சிகைகளுக்கும்
அடியனேகத்து
ஆழ நன்றிகள்!

நூலாளன்
**பதியத்தளாவ பாறூக்**

# விழித்தெழுவாய் மலையகமே!

உச்சிமலை ஏறித்தினம் உழைத்து உழைத்து
மிச்சமென்ன கண்டாய் உன்மேலான வாழ்வுக்கு
பச்சோந்தியாய்ப் பலரும்மாறி படுகுழி வெட்டியதால்
கச்சிதம் என்பதைக் கடைசிவரை இழந்துவிட்டாய்!

ஆறடி லயத்தினுள் அடைபட்டு மாக்களாக
தேறாத வாழ்கையைத்தான் தினமுமே தேடிக்கொண்டாய்
ஆறாத துயரங்களோ ஆற்று வெள்ளம் போலோடி
மாறாத வடுக்களாய் மண்டியே கிடக்கின்றது!

தப்புத்தாளத்திற்கு தலையாட்டிப் பழகிய உன்
செப்பத்தையறிந்து செம்மையோடு வேலை வாங்கி
ஏப்பமிடும் பலருக்கும் இரையாகி நிற்கின்ற
அப்பனே உந்தனின் அறியாமை என்ன என்னே!

மலையகத்தான் என்று மண்டிக் கிடந்தழியும்
நிலைகெட்ட நிலையை நின்றிங்கு மாற்றவேண்டும்
மலையிலே ஏறித்தான் மாடாக உழைக்கின்ற
தலையெழுத்தை மாற்றத் தரணியிலே முயலவேண்டும்!

கஞ்சியைக் குடித்துக் கால்வயிற்றை நிரப்பினாலும்
கொஞ்சிடும் கல்வியை குழந்தைகளுக் கூட்டவேண்டும்
இஞ்சினியர் டாக்டர் இனிய நற் பட்டதாரியென
பஞ்சமில்லாப் படிப்பாளிகளைப் பார்த்துச் சிரிக்க வேண்டும்!



பதியத்தளாவ பாறூக்

சுந்நரமும் சோமுவும் சிவகாமியும் சேர்ந்துநின்று
மந்தநிலையை இனி மலையகத்தில் மாற்றவேண்டும்
உந்தியெழும் உணர்ச்சிகளை உருப்படியாய் அமைத்து
இந்தயுகத்தின் கண் எழுச்சிதனைத் தொடவேண்டும்!

கண்விழித்துக் காலை கடுங்குளிரைக் காயமேந்தி
மண்மிதித்து மலையேறி மாக்களாய் உழைத்து நின்றும்
கண்டபலன் ஒன்றுமில்லை காலத்தை சிந்தித்து
வென்று வாழ்வதற்கு விவேகத்தை விழிப்பாக்கு!

கூடைதனைத் தூக்கித்தினம் கொண்ட பிழைப்புக்கு
கூலிதனைப் பெற்றதினால் குடிவாழ்வு உயர்ந்ததுவா?
நடைபாதைப் பிணமாக நாறித்தான் போய்நின்று
தேடல்களை இழந்து விட்டுத் தெருவினிலே நிற்பதாமோ!

உருவாகும் மலைத்தாயின் உயர்வான வாரிசுக்கு
கருவாகக் கஷ்டங்கள் கண்டிப்பாய்க் கூடாது
வருகின்ற எதிர்காலம் வளத்தைத்தர வேண்டுமென
விரும்பிடும் விண்ணப்பம் விழித்தெழுவாய் மலையகமே!

**தினகரன் குறிஞ்சிக்குரல்**
**01. 06. 1985**

**மலைநாட்டு எழுத்தாளர் அமரர் கே. கோவிந்த ராஜ் நினைவு மன்றம் நடாத்திய கதைப்போட்டியில் பரிசு பெற்ற கவிதை 2012**

# முகவுரை

சங்கூதும் சத்தம்
எங்களின்
தலையெழுத்தை எழுதி
காலப் பொழுதில்
களத்துக்கு அனுப்புகிறது!

ஆமாம்!
கூடை தூக்கி
கடமைக்குப் போகும்
நாங்கள்
இந்த நாட்டின்
ராஜபார்ட் ரங்க துரைகள்!

எங்களின்
உதிரமும் உணர்வும்
ஒட்டிக் கலந்த
தேயிலைச் செடிகள்
வாழ்வியலின்
வாரிசுகள்!

கடும் குளிர்
காவியறைகள்
இவைகளுக்குள்
வாழ்க்கை இல்லை! இல்லை!!
போராட்டமே நடத்துகின்ற
போக்கினைப் பார்க்க
ஓ உங்களுக்கு
பொழுதுகள் கிடைப்பதில்லை!

பாடையில் போகும் வரை
கூடைகளைத் தூக்குவதால்த்தான்
நாட்டின்
வளமான வருவாய்க்கு
எங்களின் உழைப்பு
வக்கீலாய் நின்று
வாதாடி
வரலாறு படைத்திருக்கிறது!

மலையகத்தான் என்றால்
உங்களின்
மனங்களிலெல்லாம்
ஒருவித மவுசுக் குறைவு
இந்த மலை நாட்டான்
இல்லை என்றால்
இயற்கை அழகு கூட
இங்கே
இறந்து போயிருக்கும்!

குன்றுகளில் பதிகின்ற
குதியடிகளெல்லாம்
வென்று வா என்ற
வேதத்தை ஓதுகிறது!

ஆமாம்!
ஒன்றை மட்டும் நம்புங்கள்
இவைகள்
"மலையகத்தான்" என்ற
பாட்டாளிப் புத்தகத்தின்
முகவுரையே தவிர
முடிவுரை
இல்லை என்பதை!

**ப்ரியநிலா ஆண்டு மலர்**
**01.01.1991**



பதியத்தளாவ பாறூக்

# விருதுகள்

விதிகள் என்பவை
வீதி விளம்பரங்கள் போல்
எழுதப்பட்டு
வினாக்களுக்குள்
வீற்றிருக்கின்றது!

விரல்கள்
கொழுந்துகளைக் கொய்யும் போது
வளர்ந்து நிற்கின்ற
வறுமைக் கொழுந்தையும்
கொய்வதாக
ஒரு
நம்பிக்கையற்ற கனவு!

குச்சி வீடுகள்
குடியுயரா வாழ்வு
பச்சைக் கொழுந்து
படுத்திடும் கூடை
மச்சமாய் பதிந்த
மாறாத் தழும்புகள்
இவைகளெல்லாம்
வழங்கப்பட்டிருக்கும்
வண்ண விருதுகள்!

தினமும் நடைபெறும்
வாழ்க்கை எனும்
மரதன் ஓட்டப் போட்டியில்
வெற்றியென எண்ணி
விழுந்து கிடக்கின்ற
வெறும் கம்பத்தை நோக்கி
ஓடிக் கொண்டிருக்கும்
எங்களின் பெயர்களை எல்லாம்
கின்னஸ் புத்தகத்தில்
எழுதப்படல் வேண்டும்!

எங்களின் உழைப்புகள்
உறிஞ்சப்படுவதனால்
நாங்கள்
சோகப் பிரசுரங்களுக்கு
சொந்தமாகி விடுகிறோம்!

இந்தத் தேயிலைச் செடிகள்
எங்களின் குருதிகளை
கடன் வாங்கி
தேநீரைச் சிவப்பாய் மாந்துவதில்
என்றைக்குமே
எங்கள் மண்
தேசத்தின் வங்கி!

வாழ்க்கைத் தளத்தில்
வருகின்ற எங்களின்
வாரிசுகளுக்கும்
விழிகள் திறந்து
வழிகள் பிறக்க வேண்டும்!

இது ஒன்றும்
பாட்டு வரமல்ல
கேட்டு நிற்கின்ற
பாட்டாளி வர்க்கத்தின்
பதிவுகளுக்கான விருது!

**தினக்குரல்**
**06. 04. 2008**

# தரிசனம்

எங்களின்
தோள்களில் இருப்பது
வெறும் தழும்புகளல்ல
கொழுந்துகளுக்காக
கூடை சுமந்த
வரலாற்று ஆவணங்கள்!

கிள்ளிய கொழுந்துகள்
கூடைக்குள் எப்படி
கூனிக் கிடக்கிறதோ
அப்படியே தான்
எங்களின் சுகங்களும்
சுக போகங்களும்!

எங்களின்
பாதங்கள் தொட்ட
மலையடி வாரங்கள்கூட
ஆதங்கப்படுகின்றன
மிதிக்கப்படுவதற்காக அல்ல
நாங்கள்
மதிக்கப்படவில்லை
என்பதற்காக!

தினமும்
மாடி வீடு கட்டி
மனங்கள் மகிழ்கின்றது
ஆறடி லயன்கள்தான்
அத்திவாரங்களாக
ஆக்கப்பட்டிருக்கின்றன!

இதோ பாருங்கள்
இந்தத் தேயிலைச்
செடிகளெல்லாம்
நன்றியுள்ள பிள்ளைகள்
எங்களின்
உழைப்பின் உதிரம்
சிவப்பு நிறமென்பதை
தேநீராய் மாறி
தேசங்களிலெல்லாம்
சொல்லிக் கொண்டிருக்கின்றன!

உழைப்புக்கு எங்களால்
உயில்கள்
எழுதப்படுவதால்தான்
இந்த மண்ணுக்கு
சொந்தமாக இருக்கிறோம்!

சுதந்திரம்
சுபீட்சம்
உரிமை
இவைகளெல்லாம்
கேட்கின்ற விடிவே தவிர
வேஷமல்ல!

ஒன்று மட்டும் உண்மை
கொழுந்துகள் எங்களின்
கூடைகளுக்குள்
குடியேறவில்லை என்றால்
எழுந்து கொள்ளாது
ஏற்றங்கள் என்பவை
விழுந்து கொள்ளும்!

**தினக்குரல்**

**06. 07. 2008**

# பேசும் கொழுந்து

கொழுந்துகள் எனும்
கூடைச் சொந்தங்கள்
நாங்கள் இங்கே
மரணத்தை தழுவியே
மறு பிறவி எடுக்கின்ற
மலைத்தாயின் வாரிசுகள்!

எங்களின் பிறப்பு
வரையப்பட்டிருக்கும்
வறுமைக்கோட்டை
அறுத்து அழிப்பதற்காய்
நிகழ்காலத்தில்
நிஜத்தை தேடுகின்ற
விடியலின் விலாசங்கள்!

எங்களைக் கிள்ளி
எடுத்துக் குவிக்கும்
ஒவ்வொரு விரல்களின்
ஆத்மாவின் அசைவுகளையும்
முத்தமிட்டு கொள்வதில்
முந்திக் கொள்கின்றோம்
ஏனெனில் எங்களின்
முகவரிகளை எழுதி
முழு மக்களுக்கும்
ஒப்படைக்கும்
சொந்தக்காரர்கள்
இவர்கள் என்பதால்!

எங்களைச் சுமக்கின்ற
சுமைதாங்கிகளான
அவர்களைக் கண்டு
நாங்கள் வடிக்கின்ற
சிவப்புக் கண்ணீர்
தேசங்களின் கொடிகளில் கூட
சிவப்பு நிறம்
சித்திரமாகி விடுகின்றன!

எங்களுக்கு
வாழ்க்கை மட்டுமல்ல
வரலாறும் உண்டு
இவைகள்
மறக்கப்படும் போது
மனக் கவலைக்குள்
மக்களும் மண்ணும்
சொந்தமாகி விடுகின்றன!

நாங்கள் வெறும்
இயற்கை அழகு மட்டுமல்ல
வரலாறு வரையும்
ஒரு பரம்பரையின்
பாரம்பரியத்தின்
பங்காளிகளாகவும்
இருக்கின்றோம்!

ஆமாம்
எங்கள் கழுத்துகளுக்கு
கத்திகள் பாயும் போது
வெட்டக் கொடுப்பதற்கு
நாங்கள் ஒன்றும
ஆடு மாடுகளல்ல
உரிமை என்பது உயிர்
அது
எப்போதும்
எந்த நேரத்திலும்
எழுந்து பேசும்!

**தினக்குரல் : 03.08.2008**

# மண்ணின் மைந்தர்கள்

மலையக மண்
மைதானமாகி விட்டதால்
ஓட்டப் பந்தயத்தில்
தினமும்
ஓடிக்கொண்டிருக்கும்
மைந்தர்கள்!

வயிற்றின் கழுவலுக்கு
வாடிக்கையாகித் தினம்
ஓடிக்கொண்டிருக்கும்
கணிப்புக் கால்களால்
இதுவரை
வெற்றிக் கோடு
வெல்லப்படவில்லை!

செவிடன் காதில்
ஊதிய சங்காக
சங்கதிகளெல்லாம்
சதா காலங்களும் ஊதப்பட்டு
வேதாளக் கதைகளாகவே
வேறிச்சோடிக் கிடக்கிறது!

வாக்குறுதிகள் என்பவை
பொய்கள் கலந்த
நிகழ்காலத்து
சந்தோஷச் செய்தி என்பது
கனநாளாய் இருந்து
அச்சேறி இருக்கின்ற
தலைவிதிச் செய்தி!

அஹிம்சை என்பதுதான்
எங்களுக்கு தெரிந்த
ஆயுதமற்ற போராட்டம்
அதனால்தான்
வாழ்க்கைச் சுமை
வறுமைப் போராட்டம்
இவைகளுக்கு மத்தியில்
ஒரு மஹாத்மாவாக
வீற்றிருக்கிறோம்!

நாட்டுப் பற்றில்
நம்பிக்கை கொண்டவர்கள்
கேட்பதெல்லாம்
அடிப்படை வசதிகளின்
அத்திவாரமே தவிர
ஆயுதமல்ல!

மண்ணை நம்பியுள்ள
மலைவாழ் மக்களின் பால்
கண்கள் திறக்கப்படுமானால்,
அப்போது நாங்களும் இங்கே
மண்ணின் மைந்தர்கள்!

ஆமாம்!
விழிப்பிலும் கனவு
காண்கிறோம்
விளையாட்டாக அல்ல
விமோனசனத்துக்கான
ஒரு
விடியலை நாடி!

**தினக்குரல் : 10.08.2008**

# பிரகடனம்

மக்களால் பெருமை சேர்க்கும்
மலையகமாம் எங்கள் நாட்டில்
பக்கநல் பலமாய் நின்று
பாடுபடும் எங்களைத் தான்
சக்கையாப் பிழிந்து நித்தம்
சாடுகின்ற கதைகள் எல்லாம்
இக்காலம் வேகா தையா
எழுந்துயாம் நிமிரந்தோ மின்று!

மலையகத்தின் மந்த நிலையை
மாற்றிவிட மனமே கொண்டு
நிலையிலா வாழ்வி னுக்கோர்
நிரந்தரநல் வழியைக் கண்டு
அலைந்தழியும் நிலைமை யிங்கு
ஆகாதினியும் எம்ம வர்க்கு
நிலைஉயரப் பாடு பட்டு
நின்றிடுவோம் இந்த மண்ணில்!

கூடைகள் சுமந்த முதுகில்
கூனல்கள் தடமாய் விழுந்து
பாடையில் போகும் பிணமாய்
பலகாலம் செத்த வாழ்வு
கோடையின் வெப்பம் செப்பி
கொடுமையால் சுட்ட தெல்லாம்
மேடையில் அரங்க மேற்றி
மேலாகச் சொல்லி வைப்போம்!

உதிரங்கள் கலந்த இந்த
ஒவ்வொரு செடியும் சொல்லும்
கதிரவன் கூட ஒரு நாள்
கட்டாயம் சாட்சி சொல்வான்
பதிலுக்கு எங்கள் குரல்கள்
பாட்டாளி உயர்வைக் கூறும்
மதியினால் வாழ்வை வென்ற
மலையகம் காத்து நிற்போம்!

சங்கூதும் சத்தம் எங்கள்
தலைவிதியை எழுதி னாலும்
மங்கம்மா மாணிக் கமும்
மலையகத்து மைந்த ரென்போம்
அங்கங்கள் கறுத்தால் என்ன?
அங்கிருக்கும் அடிமை உணர்வு
பங்கங்களை விரட்டி வைத்துப்
பார்புகழ வாழ்ந்து நிற்போம்!

கஞ்சியைக் குடித்துத் தினம்
கால்வயிற்றை நிரப்பி னாலும்
நெஞ்சிறுகி கொண்டு நிற்கும்
நெடுங்கஷ்டம் தாங்கி யேனும்
எஞ்சினியர் டாக்டர் என
எங்களது பிள்ளை மாரை
கொஞ்சி விளையாட ஈங்கு
குடியமர்த்தி மகிழ்ந்து நிற்போம்!

**சுடர் ஒளி**
**20.09.2008**

# வினாக்கள்

மலையேறி நலிந்து நித்தம்
   மாடாக உழைத்து என்றும்
நிலையிங்கு கொஞ்ச மேனும்
   நிமிரவே இல்லை பாரில்
சிலையாகி சமைந்து போன
   சீரழிந்த எங்கள் வாழ்வின்
தலையெழுத்தை மாற்று தற்கு
   தன்னிறைவு என்று பூக்கும்?

அதிகாலை குளிரைத் தாங்கி
   அடியெடுக்கும் எங்கள் கால்கள்
துதிபாடும் வயிற்றுக் காக
   துணைபோகும் உழைப்பு யாவும்
சதிராடி வீழ்ந்து மண்ணில்
   சாவுதனை அணைத்துக் கொள்ளும்
விதியதனை மாற்றி வைக்கும்
   விடிவுநாள் என்று பூக்கும்?

ஆறடி லயத்துக் குள்ளே
   அடைபட்ட மாக்களைப் போல்
தேறாத சுகமி ழந்து
   தேசத்தை காக்கு மெங்கள்
பேறான உழைப்புக் கெல்லாம்
   பெரிதாக மதிப்பே இல்லை
கூரான எங்கள் வாழ்வு
   சீராகும் நாளென் நாளோ

அருள்சாமி அன்னார் மனைவி
அன்னம்மா பிள்ளை மாரும்
இருள்சூழ்ந்த வாழ்வில் நின்று
இடுக்கணில் உழலும் வாழ்வு
கருவுற்று நிற்கு மந்தக்
கஷ்டங்கள் யாவும் ஓருநாள்
பெருக்காறு போன்றே ஓடும்
பேறுநாள் என்று பூக்கும்?

வாழ்க்கையின் செலவு முன்னால்
வரையினை போல ஓங்கி
வாழ்வினில் வறுமைக் கோட்டை
வரைந்துதான் நிற்கும் போது
ஊழ்வினை என்று சொல்லி
ஓப்பாரி வைத்து நிற்கும்
ஏழ்மையின் குரல்கள் ஓய
ஏற்றநாள் என்று பூக்கும்?

சஞ்சலத் தொடராம் அந்த
சங்கிலி அறுந்து போக
அஞ்சிடும் நிலைகள் மாறி
அவரவர்க்கு கல்வி கிட்ட
பஞ்சமும் பிணியும் வாழ்வில்
பறந்தோடி மறைந்து போக
நெஞ்சாற வாழ்வு காணும்
நிலையிங்கு என்று பூக்கும்?

**சுடர் ஒளி**
**12.10.2008**



பதியத்தளாவ பாறூக்

# விதிகள்

நாங்கள்
பழங்குடிகளென்ற
பட்டத்தின்
பங்காளிகளென்றாலும்
புதுமைகளை நோக்கி
பயணித்துக் கொண்டிருக்கும்
பயணிகள்!

தோட்டாக் காட்டானென்று
எங்களுக்கு
முத்திரை குத்தப் பட்டிருந்தாலும்
இந்தத் தேசத்தின்
வளத்திற்கு
வழிகளைச் சொல்லுகின்ற
வள்ளுவர்கள்!

ஆமாம்!
எங்களின்
விரல்கள் மட்டும்
இங்கே
கொழுந்துகளை
கொய்யவில்லை என்றால்
பொருளாதாரம்
பொசுக்கென்று
போய்விடும்!

ஒரு சாண் வயிறு
ஒவ்வொரு நாள் பசி
கனவுகள்
நனவுகள்
ஏக்கங்கள்
இலக்குகள்
இவைகளுக்கு
நாங்களும்
சொந்தக்காரர்கள்!

இவைகளைப்
புரியாத புருஷர்கள் மத்தியில
நாங்கள் இங்கே
விதியின் இலக்கணமாக
வீற்றிருக்கிறோம்!

இங்கே
சபைகள் என்பது
சயனித்துக் கொள்வதால்
எங்களின்
விடியலுக்கான விண்ணப்பங்கள்
விறகுக் கட்டைகளாக
விழுந்து எரிந்து விடுகின்றன.!

உயர்ந்து கொண்ட
அவர்கள்
எங்களின் உயர்வுக்கு
ஏணி வைக்க மறந்து விட்டனர்.!

அதிகாரங்கள்
அறிக்கைகளை விடுவதில்
புத்திசாலியாக இருப்பதால்
முட்டாள்கள் பட்டியலில்
எங்களின் முகவரிகள்
எழுதப்படுகின்றன.!

அழிக்கப்படாத
எங்களின் தலைவிதிகளுக்கு
அவர்கள்
ஆசிர்வாதம்
வழங்குவார்ளேயானால்
விழித்தெழும் மலையகத்தில்
நாங்களும்
வெற்றியாளர்களாக
இருப்போம்!

**சுடர் ஒளி : 08.02.2009**

# மனத்துளிகள்

இந்த மலையக
மைதானத்தில் தான்
எங்களின்
உயிர் பிச்சைக்கான
உபாயத் தேர்வுகள்
ஒவ்வொரு நாளும்
நடத்தப்படுகின்றன!

ஆமாம் !
பட்டப்பகல் பருதிக்கு
பங்காளியாகிக் கொண்ட
எங்களின்
மேனித் தளங்களில்
வெள்ளை வர்ணங்கள்
கொள்ளையடிக்கப்பட்டு
கறுப்பு நிறங்களால்
கைது செய்யப்பட்டிருப்பவர்கள்
நாங்கள்!

பசிக்காக வேண்டி
புசிக்கின்ற உணவு கூட
மரத்தடியிலும்
மலையடி வாரத்திலும்
நிறை வேற்றப்படுகின்ற
நியதியாகவே இருக்கின்றது!

அடிப்படை வசதி என்பது
எங்களுடன்
அல்லும் பகலும்
மல்லுக் கட்டுகின்ற
ஒரு மன நோயாளி!

முகமூடி அணிந்து
முகங்களைப் பார்க்கின்ற
வாக்குறுதிகள் என்பது
வழங்கப்படுகின்ற
வரச் சான்றிதழாக
எங்களின்
வாழ்க்கை தெருவில்
வாழ்ந்து கொண்டிருக்கின்றன!

கண்காணிப்புக்குள்
கனவான்களின் கண்கள்
மேய்ந்து கொள்வதால்
எங்களின்
மனச் சுதந்திரங்கள்
மாறுவேடங்களால்
மரணதண்டனை பெறுகின்றன!



*பதியத்தளாவ பாறூக்*

நாங்கள்
வேலைத்தளங்களில்
வேதனம் வாங்குகின்ற
வெறும் கூலிகளல்ல
எங்களுக்கும்
உரிமைகளும்
உணர்வுகளும் உண்டு
இல்லை என்றால்
புரிய வைப்பதற்காய்
பொழுதுகள் பல
புலரவே உள்ளன!

தினமும்
கனவுகளைக் காணும்
எங்கள் கண்களுக்கு
பகல் இரவெனும்
பாகுபாடு பார்க்கும்
பக்கங்கள் கிடையாது
அதனால்தான் அவைகள்
நனவுகளை எண்ணி
நனைந்து கொண்டிருக்கின்றன!

மனிதர்கள் என்ற
மகுடத்தின் கீழ்
நாங்களும்
மதிக்கப்படுவோமே யானால்
புனிதம் என்பது
புதைகுழியிலிருந்து
மீட்கப்படும்!

நிதர்சன நிஜம்
நெருப்பாக்கப் படுவதால்
ஆதங்கம் என்பது
அடிக்கடி எரியுண்டு
அரங்கேறாப் பாத்திரமாக
அடையாளமாகி விடுகிறது.

ஆமாம்!
தலைக்கொரு காட்சியென
தலைதூக்கி நிற்பதெல்லாம்
எங்களின்
தலையெழுத்துக்களுக்கு
அவைகள்
தக்க பலனைத் தருமானால்
மலையகத்து மைந்தர்கள்
மறுபதிப்பு செய்யப்பட்ட
மாற்றுத்தங்கமாக
மலையக மண்ணில்
இருப்பார்கள் என்பது
மறுக்கப்படாத உண்மை!

**சுடர் ஒளி**
**05.04.2009**

# மந்திரம்

மலையக மண்ணில்
விளையாடப்படும்
சதுரங்கத்தில்
வெட்டப்படும் காய்கள்
நாங்கள்!

கூடை சுமந்து
கூனிப் போன முதுகுகளிடம்
கேட்டுப் பாருங்கள்
கேள்விக் குறியை
எங்களிடந்தான்
கடன் பட்டிருப்பதாக
பாடப் புத்தகங்கள் சொல்லும்!

ஆறடி லயம்
அட்டைக் கடி
போராட்ட வாழ்வு
புண்ணான தழும்புகள்
மலைகளின் விதி
மாறாத சோகம்
இவைகளெல்லாம்
தேறாத வாழ்வுக்கு
தெரிவான விருதுகள்!

கடந்த காலங்களில்
கைதியாக்கப்பட்ட
கனவுகளை
நடந்து வந்த எங்களின்
நாட்குறிப்புச் சொல்லும்!

ஆமாம்!
கூடை சுமந்த
ஒவ்வொரு தோளுக்கும்
குறிப்பிருக்கிறது
அது
பாடையில் போனாலும்
பதிலை விட்டுச் செல்லும்!

விடியல் பொழுதிடம்
விசாரித்துப் பாருங்கள்
ஒரு சாண் வயிற்றுக்காக
ஓட்டப் போட்டி நடத்தும்
பாட்டாளிகளின்
பரிதாபக் கதையை
பட்டெனச் சொல்லும்!

ஓ எங்களின் உடல்கள்
இங்கே
புதைக்கப்படும் போது
அவைகள்
மறு பிறவி எடுத்தால்கூட
தேயிலைச் செடியாகத்தான்
தெரிவாகி இருக்கும் !

தடுப்பார் இல்லை என்று
இத்தனை காலமும்
எடுப்பார் பிள்ளையென
இருந்து விட்டோம்
அதனால்தான்
முதலாளித்துவம்
எங்களின் முதுகுகளில்
முகவரியை எழுதிக்கொண்டது!

கொழுந்தெடுத்த
எங்கள் விரல்கள் தான்
அவர்களை
கோடீஸ்வரர்களாக்கியது
இல்லை என்றால்
எழுந்திருக்கமாட்டார்கள்
விழுந்திருப்பார்கள்!

இந்த மண்ணுக்கு
கருணையாய் பார்க்கின்ற
கண்களுண்டு
ஆனால்
பார்க்காது கண்கள்
படுத்துறங்கிப் போவதால்
சங்கிலித் தொடரில்
எங்களின் விதிகள்!

ஆமாம்!
நாங்கள்
மலையகத்து மந்திரவாதிகள்
அதனால்தான்
மறக்க முடியாத
மன வேதனைகளை
மந்திரமாய் சொல்லுகிறோம்
மாற்றங்கள் வரும் வரை
மறக்காது ஆடுவோம்
மறுக்கப்படுமானால்
சுற்றிய அதிகாரங்களை
சுடலையில் புதைப்போம்!

**சுடர் ஒளி**

**20.06.2009**

# குருதிக் கொழுந்து

சங்கூதும்
சங்கதிகளுக்குள்தான்
எங்களின்
தலைவிதிகள்
தயாரிக்கப்படுகின்றன!

கூடைதூக்கி
கூனிக்குறுகி
கேள்விக் குறியாக்கப்பட்டது
முதுகுகள் மட்டுமல்ல
வாழ்க்கையும்தான்!

இந்த
கொழுந்துக் குழந்தைகளுக்கு
எங்களின்
குருதிகள் மட்டுமல்ல
குருக்களும் நாங்கள்தான்!

மலைகள் ஏறுகின்ற
எங்களின் கால்கள்
தினமும்
விடியலுக்கு
விளக்கங் கேட்டே
விழித்துக் கொள்கின்றன!

எங்களின்
விரல்களுக்கு
விடுதலையில்லை
அதனால்த்தான்
தினமும்
கொழுந்துகளுக்குள்ளே
குடித்தனம் நடத்துகிறோம்!

தேநீரைப் பற்றி
செடிகளிடம் கேட்டால்
குறிஞ்சி உடல்களில்
உறிஞ்சப்படும்
உழைப்பின் குருதியே
சிவப்பு நிறமென்று
சிரந்தூக்கிச் சொல்லும்!

அட்டைக்கடி
ஆறடி மண்
காவி அறை
காட்டாந்தரை
இவைகள்
உழைக்கும் எங்களுக்கு
உயில் எழுதப்பட்ட
உரிமைச் சான்றிதழ்கள்!

காலைக் கதிரவனிடம்
கேட்டால்த் தெரியும்
தினமும்
கடுங் குளிரோடு
கைவளம் பண்ணுகின்ற
முதல் வாடிக்கையாளர்கள்
நாங்கள்தான் என்ற
நலிந்த கதையைச் சொல்லும்!

ஆடிக்கொள்ளும்
அறிக்கைத் தொட்டில்களுக்கு
குறைச்சலே இல்லை
ஆதனால்தான்
விழிக்க முடியாத
வாழ்க்கைக் குழந்தைகள்!



பதியத்தளாவ பாறூக்

நீயா? நானா? என்ற
கயிறிழுத்தல்ப் போட்டிக்குள்
அறுந்து போவது
உணர்வுகள் மட்டுமல்ல
உரிமைகளும்தான்!

எங்களின்
வியர்வைக்குள்ளேதான்
வெளியுலகப் பொருளாதாரம்
வெள்ளையாக்கப்படுவது
விடுகதையல்ல
ஒரு வெற்றியின் கதை!

தினமும்
விடியும் பொழுதுக்குள்
அழுது கொள்ளும்
எங்களின் கண்ணீர்
தொடரும்
வாழ்க்கைத் தெருவில்
வற்றாத வடிவம்

இன்னும்
மலையகத்தான் என்ற
வயலுக்குள்
அறுவடை செய்யப்படாமல்
அழுது கிடக்கும்
மனிதமும்
மலையகமும்!

**மீட்சி இலண்டன்**

**01. 03. 2013**

# சரிந்த மண்ணும் பிரிந்த உயிர்களும்

மண் சரிவுகளால்
எழுதி முடித்த
மலைத்தாயின்
தலை விதியை எண்ணி
நிலை குலைந்த
எந்தனின் நெஞ்சமும்
ஒரு கணம்
சரிந்து விழுந்தது!

கண்மூடி விழிப்பதற்குள்
மண்மூடி உயிர் துறந்த
இந்த ஆத்மாக்களை
எண்ணி அழுது
இதயம் சிவந்த
விழிநீர் அஞ்சலி இது!

இறை விதி என்றாலும்
கணக்கில் எடுக்காது
காலத்தை வீணடித்து
கண்ணீருக்கு
கதை சொல்லி வைத்த
காலத்தால் என்றும்
காணமல் போகாத
இதுவோர்
கண்ணீர் காவியம்!

மாறுங்கள் என்று
மந்திரம் மட்டும் சொன்ன
அதிகாரக் குரல்கள்
மாற்று வழிக்கு
மறுவழி சொல்லாது
மௌனித்துப் போன
நிதர்சன நிஜத்தின்
நீறு பூத்த நெருப்பு!

தப்பிப் போன
தலைகளின் கணக்குகள்
அப்பாவி மக்களின்
ஆயுளுக்கு ஆப்பு வைத்தது!

“வருமுன் காப்போம்” என்ற
அரிச்சுவடிப் பாடத்தைக்கூட
அறியாதிருந்து
தூங்கித் தொலைத்த
தலைகள்!

இறந்து போன உயிர்களை
சிக்கனமாய்ச்சொல்லி
சுரக்காயை
சோற்றுக்குள் மறைக்க
முயலும்
காய் நகர்த்தும்
காவடிக் கரங்கள்!

காவியறைக்குள்
காவியமாகிப் போன
உயிர்களும் உடமைகளும்
மறுக்க முடியாத
மலையகப் பக்கங்களுக்குள்
மண்ணுக்குள் புதைந்தவை
மனித உடல்கள் மட்டுமல்ல
மறந்து போன
மனிதமும் தான்!

**விடிவெள்ளி**
**13.11.2014**

## கண்மூடி விழிப்பதற்குள் மண் மூடிய மலையகம்

கண் மூடி விழிப்பதற்குள்
கட்டவிழ்ந்த விதி இங்கே
மண்ணுடன் மனை அழித்து
மண்மூடி உயிர் பறித்துப்
பண்ணியே நின்ற பெரும்
பாதக வேள்வி தனை
எண்ணியே பார்க்கும் போது
இதயமது அழுது நிற்கும்!

மலைகளில் ஏறித் தினம்
மாடாக உழைத்த மக்கள்
தலைகளில் வீழ்ந்த இடி
தாங்கிடச் சக்தி யற்று
நிலைகளில் குலைந்து நின்று
நிம்மதியை இழந்த வேளை
உலைவைத்து உயிரைப் பறித்த
உறுவினை நெஞ்சை சுடும்!

ஆறடி லயன் களுக்குள்
அடைபட்டு வாழ்ந்த வேளை
தேறாத விடிய லுக்குள்
தெரிவாகி நின்ற மக்கள்
பேரிடியாய் வந்த சேதி
பெருஞ் சுமையாய் மாறிவிட
ஊரின் அழிவுக் குள்ளே
உட்கார்ந்த சோக மாகும்!

இன்னொரு விதியை என்றும்
இம்மண்ணோ வரம் பெறாது
எண்ணியே தலைமை இங்கே
இடர்களை இடித்த கற்றி

புண்ணுக்குப் போடும் மருந்து
புதிதாகச் சுகங்கள் தந்து
மண்ணுக்கு உயிர் கொடுத்து
மலையகம் வாழ வேண்டும்!

உண்மைகளை அறிய வேண்டி
உயர் குழுக்கள் ஓடிவந்து
பின்னாலே அலைகள் எல்லாம்
பிசுபிசுத்தும் போய்ச் சாகும்
கண்ணாறக் கண்டு நிற்கும்
காட்சிகள் தெளிவு பெற்று
மண்ணுக்கு வேண்டும் வாழ்வு
மலையகம் சிறக்க வேண்டும்!

அதிகாரக் குரல்கள் இங்கே
அறிக்கைகளைச் சும்மா விட்டு
சதிராடி நிற்கு மிந்தச்
சங்கதியைச் சரியே செய்து
விதியாக்கி விழியு மாக்கி
விடிவு நிலை என்பதனை
மதியாலே இடும் பணியால்
மலைமகள் சிரிக்க வேண்டும்!

மழை வந்தால் பள்ளிக்கூடம்
மழை விட்டால் லயங்களென
அழைப்பாணை இடும் குரல்கள்
அல்லழிக்கும் நிலை மாற்றி
உழைக்கின்ற பாட்டாளிகளின்
உயர்வுக்கு வழி திறந்து
தழைத்தோங்கும் தலை முறைக்குத்
தக்கபணி செய்ய வேண்டும்!

**சுடர் ஒளி : 20.11.2014**

# மக்களும் மலையகமும்

தோட்டத்து மண்
மீட்கப்படுவதற்கான
மீளாய்வு இல்லாமல்
மௌனித்துப் போன
மலையக விதிகள்

தினமும்
மலையேறி மாரடிக்கும்
வாழ்க்கைப் போரட்டத்தின்
வரை படத்தின் முன்னால்
இந்த மண்ணின்
மைந்தர்கள்!

கூடை
கோணித் துண்டு
கோட்டுத் தடி
இவைகள்
மலையேறுபவர்களுக்கான
மரபுவழிச் சீருடைகள்!

இவர்களின் கனவுகளுக்கு
எந்தப் பஞ்ஞாங்கத்திலும்
பலா பலன்கள்
காட்டப்படுவதில்லை!

மலையேறுகின்ற
மன வலிகளுக்கான
மௌன மொழிகள்
மொழி பெயர்க்கப்படாத
இவர்களின்
வாழ்க்கைப் புத்தகம்!

கூடைக்குள்
விழுந்து கொள்வது
கொழுந்துகள் மட்டுமல்ல
எழுந்து பார்கின்ற
எண்ணங்களும்
இலட்சியங்களும்தான்!

இவர்களின்
உழைப்புப் புத்தகம்
ஓட்டை இல்லாததினால்தான்
தேசத்திற்கு
மலையகம்
சோறுபோடுகின்றதென்பது
நிலைக்கண்ணாடியின்
நிதர்சனம்!

நிஜங்கள்
நிராகரிக்கப்படும் போதெல்லாம்
இந்த மண்
ஆசிர்வாதமற்ற அனாதையாக
அழுது கொள்கிறது!

கடும்போக்குக் குரல்கள்
காவல் தெய்வங்களான போது
வரங்கேட்ட பட்டியலில்
முகங்களும் முகவரிகளும்!

தலைமைகள்
தலையணையாகிப் போவதால்
விழிப்பை மறந்து
தூக்கத்தைத் துணையாக்கியது!

அழிக்க முயலாததினால்தான்
அனர்த்தங்களும்
அழிவுக் கோடுகளும்
இந்த மண்ணில்
அடையாளமாகிக் கொண்டன!

எதிர் பார்ப்புகளுக்குள்
நாளைய சந்ததியினரும்
மலை மண்ணில்
பதிவாகியுள்ளனர் என்பது
மறுக்க முடியாத மறுபக்கம்!

நல்லாட்சியில்
"மாற்றுவோம்" என்ற
மந்திரத்தின் முன்னே
நம்பிக்கை என்பதை
நாட்க்குறிப்பில் வைத்திருக்கும்
மக்களும் மலையகமும்!

**ஜீவநதி : 01. 03. 2015**

# குன்றின் குரல்

எங்கள் பாதத்தடிகளில்
பச்சைப் போர்வைக்குள்
படுத்துக் கிடக்கும்
தேயிலைச் சேய்கள்!

நாங்கள்
"மலையகம்" என்ற
மந்திரச் சொல்லுக்குள்
நிலை கொண்டு நிற்கின்ற
நிதர்சனத்தின் நிழல்!

பாட்டாளித் தோழர்கள்
பங்காளியாகி
கூட்டாக நின்று
குடித்தனம் நடத்தும்
குறிஞ்சி நிலம் இது!

ஒரு சாண் வயிற்றுக்கு
ஓடி உழைத்து
இரு சாண் வழுக்கி
வாழுகின்ற மக்களின்
ஒரு
போராட்ட மைதானம்!

விடிவுகளுக்கு
விளக்கம் கிடைக்காமல்
வீணடிக்கும் காலங்களால்
வீழ்ந்து கிடக்கும்
வாழ்வின் வட்டங்கள்!

குழந்தைகளுக்கு
பாலூட்டி வளர்ப்பார்கள்
ஆனால் இங்கே
ஓவ்வொரு தாயும்
குருதியை ஊட்டி
கொழுந்துகளை
வளர்கிறார்கள்!

அடிப்படை நாடாக்கள்
அறுந்து போகும்போது
பொழுதுகளுக்குள்ளே
பூகம்பம் வெடிக்கிறது!

வளத்தை எடுத்து
வாரிக்கொடுக்கும்
வள்ளல்களை
அளந்து பார்க்கும்
அளவு கோல்கள்
காணாமல்போய் விடுகின்றன!

அல்லல்களுக்குள்
தினமும்
மல்லுக் கட்டுகின்ற
இவர்களின்
உரிமை மொழிகள்
உரிய நேரங்களில்
மொழி பெயர்க்கப்படுவதில்லை!

அந்நியமாக்கப்படும்
அடையாளம் அழிக்கப்பட்டு
இந்நாட்டின்
உரிமை உறவுகள்
இவர்களும்தான் என்ற
இனங்காணல்
எழுதப்படுமானால்
மலையகம் சிணுங்காது
சிரிக்கும் என்பது
குன்றின் குரலாகும்!

**சுடர் ஒளி : 29. 03. 2015**

# கொழுந்தின் முகம்



70 களில் இலக்கிய மண்ணில் கால் பதித்த கவிஞர் பதியத்தாளாவ பாறூக் இலங்கை இந்தியா, இலண்டன் போன்ற நாடுகளிலிருந்து வெளியான ஐம்பதுக்கும் மேற்பட்ட பத்திரிகை சஞ்சிகைகளில் கதை; கட்டுரை, கவிதை, உருவகம், கவிதைநறுக்கு, விமர்சனம் போன்றவைகளை சொந்தப் பெயரிலும் "கலைநதி" என்ற புனைப் பெயரிலும் நூற்றுக் கணக்கான படைப்புக்களை எழுதியுள்ளார்.

இலங்கை வானொலியில் பல படைப்புக்கள் பங்களிப்பாகியுள்ளதுடன் வானொலி, மேடை, தலைமையென கவியரங்குகள் பலதில் களம் கண்டவர்.

தொடர்ந்து 2006, 2007, 2008, 2009, 2012 கால வரை கலைத்தீபம், கவிப்பருத்தி, சாமஸ்ரீ, தேசமாணி, கலாபூஷணம், ராஜேஸ்வரி சன்முகம், இரத்தின தீபம், கலைச்செம்மல், பாவரசு போன்ற எட்டு விருதுகளையும் பல சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.

1972ம் ஆண்டு மலையகத்தின் ஹொப்டனில் மேடையேறிய "சாவதோ நீதி" என்ற சமூக நாடகமாகும். இவரை இனங்கண்ட செங்கதிர் இலக்கிய சஞ்சிகை முன் அட்டையில் முகத்தை வைத்து இவரை கௌரவித்தது.

இலக்கிய மன்றங்களில் தலைவர் பணிப்பாளர் ஆலோசகர் உறுப்பினராகவும் இருந்து வரும் இவர் ஈழத்து எழுத்தாளர்களின் கதை, கட்டுரை, கவிதை, நாவல், நாட்டார் பாடல் போன்ற தொகுதிகளுக்கு அணிந்துரை, கணிப்புரை, ஆசியுரை, பாவாழ்த்துப் போன்றவைகளையும் செய்துள்ளார்.

நபியமுதம், நல்லறங்கள், கைவிளக்கு, குருதிக்கொழுந்து ஆகிய தொகுதிகளை அச்சிட்டு இலவசமாக இலக்கிய உலகிற்கு கொடுத்திருப்பது ஒரு புத்தகப் புரட்சி என்றே குறிப்பிட வேண்டும்.

கிழக்கின் காத்தான்குடியைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர் பாறூக் மலையக மக்களுடன் தன்னை இணைத்துக் கொண்ட இலக்கியப் பணி பாராட்டக் கூடியது. எழுத்தாளர்கள் ஆய்வாளர்கள் ஊடகவியாலளர்கள் மலையக மக்கள் போன்றவர்களால் குருதிக் கொழுந்து ஒரு வரலாற்றுத் தொகுதியாக பேசப்படும் என்பது எனது நம்பிக்கையாகும்.

வாழ்க இவர் பணி

கலாபூஷணம்
எம்.எம்.எம். மஹ்றூப் கரீம் எம்.ஏ ஜே.பி
(பன்னூலாசிரியர்)
காத்தான்குடி

சர்வதேச தரத்திற்கான புத்தகப் பதிவு இலக்கம் : 978-955-52920-4-7